# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,719 — 1966 ඔක්තෝබර් 27 වැනි බ්‍රහස්පතින්දා — 1966.10. 27**

14,719 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ந் திகதி வியாழக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி IV — உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. .. | 301 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெறறிடம் .. .. .. | 302 | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும .. | 308 | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | 309 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்

**84 ம் பிரிவின் கீழான கட்டளை**

(262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 26 (2) (அ) என்னும் பிரிவின்கீழ் கொழும்பு மாவட்டத்து தேர்தல்கள் உத்தியோகத்தரால் பிரசுரிக்கப்பட்ட 1966, செத்தெம்பர் 14 ந் தேதியிடப்பட்ட அறிவித்தல் மூலம், 1966, செத்தெம்பர் முப்பதாம் நாள், கொழும்பு மாவட்டத்திலுள்ள பூகொட கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் 8 ம் இலக்க வட்டாரத்துக்கான தேர்தலுக்கு அபேட்சகர்களின் நியமிப்பு நிகழவிருந்த தேதியாகக் குறிக்கப்பட்டபடியாலும் :

எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக மேற்சொல்லப்பட்ட தேதியில், மேற்சொல்லப்பட்ட வட்டாரத்துக்கான தேர்தலுக்கு அபேட்சகர்கள் எவராலுமேனும் எவர் சார்பாகவேனும் தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தரிடம் நியமிப்புப் பத்திரங்களை ஒப்படைக்க முடியாதமையாலும் :

மேற்சொல்லப்பட்ட வட்டாரத்துக்கான தேர்தலுக்கு அபேட்சகர்களை நியமித்தற்பொருட்டு விசேட ஏற்பாடு செய்வதவசியமாகையாலும் :

(262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 84 ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகார பலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம், ஆகிய நான், இப்பொழுது, இக்கட்டளை வாயிலாக—

(1) கொழும்பு மாவட்டத்திலுள்ள பூகொட கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையின் 8 ம் இலக்க வட்டாரத்துக்கான தேர்தலுக்கு அபேட்சகர்களின் நியமிப்புத் தேதியாக 1966 செத்தெம்பர் முப்பதாம் நாளைக் குறிப்பிட்டு, (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 26 (2) (அ) என்னும் பிரிவின்கீழ் கொழும்பு மாவட்டத்துத் தேர்தல்கள் உத்தியோகத்தரால் பிரசுரிக்கப்பட்ட 1966, செத்தெம்பர் 14 ந் தேதியிடப்பட்ட அறிவித்தல் இன்மையுற்று எப்பயனுமற்றதாகி, எக்காலமும் அவ்விதமிருந்திருப்பதாகக் கருதப்பட வேண்டுமெனவும் ;

(2) கொழும்பு மாவட்டத்து தேர்தல்கள் உத்தியோகத்தர் மேற்சொல்லப்பட்ட வட்டாரத்துக்கான தேர்தலுக்கு அபேட்சகர்கள் நியமிக்கப்படவேண்டிய மற்றொரு தேதியைக் குறிப்பிட்டு புதிய அறிவித்தல் ஒன்றை அப்பிரிவின்கீழ் பிரசுரித்தல் வேண்டுமெனவும் வெளிப்படுத்துகிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1966 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 18 ந் உ.

10–1051—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,719

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந் உ.

போர்ணட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

## பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 183 ஆம் பிரிவின்கீழான கட்டளை

1957 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்ட வாறுள்ள (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 183 ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சியமைச்சர் முருகேசன் திருச்செல்வம் ஆகிய யான், திசமகாராமப் பட்டினம் தொடர்பாக மேற்சொல்லப்பட்ட பிரிவின் கீழாக்கப்பட்டு 1966 ஓகத்து 26 ந் திகதிய 14,710 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையினுல் திருத்தப்பட்ட படியான 1966 மே 6 ந் தேதிய 14,694/1 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையை, அதற்கண்ணுள்ள (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினையிடுவதன் மூலம் 1966 ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 8 ந் தேதியிலிருந்து இக்கட்டளையால் திருத்துகிறேன்.

"(ஆ) திசமகாராமப் பட்டினத்தின் அலுவல்களை அப்பட்டினத்துக்கென அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் புதியதொரு பட்டினசபை அமைக்கப்பட்டு அச்சபை தனது தலைவரைத் தெரியும்வரை நிருவகிப்பதற்கெனவும், அந்நோக்கத்துக்கென அக்கட்டளைச் சட்டத்தின் கீழ்ப் பட்டின சபையொன்றுக்குள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கவும், கடமைகளைப் புரியவும் எனவும், உள்ளூராட்சி உதவியாணையாளர் திரு. கெற்றியாருச்சிக்கே பியதாசா அபயவாதனுவைச் சிறப்பாணையாளராக நியமிக்கிறேன்".

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சியமைச்சர்.

கொழும்பு.
1966 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 25 ந உ.

10-114—27.10.66 திகதிய வர்த்தமானி இல. 14,719

---

## நாவலப்பிட்டி நகரசபை

### நகரசபைகள் கட்டளைச் சட்டம்

### 1966 ஆம் ஆண்டுக்கான விசேட மலசலகூட வரி

(255 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ) என்னும் பிரிவின் கீழும், அப்பிரிவினுல் உள்ளூராட்சியமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அவரால் கொடுபட்ட அங்கீகாரத்துடனும், நாவலப்பிட்டிப் பட்டினத்தினுள்ளேயுள்ள அசைவற்ற ஆதனமெல்லாவற்றினதும் வருடாந்தப் பெறுமதியில் நூற்றுக்கு நான்கு வீதமானதும், முறையே யூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய தேதிகளில் சமமான மூன்று தவணைப் பணங்களாகக் கொடுபடற்பாலதுமான விசேட மலசலகூட வரியொன்றை நாவலப்பிட்டி நகர சபை, துணைவிதிகளின்படி விதிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் விலக்குகளுக்குமமைய, 1966 ஆம் ஆண்டுக்கு விதித்திருக்கின்றதென இதனுல் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. ஜீ குணவர்தன
நிரந்தரச் செயலாளர்.
உள்ளூராட்சியமைச்சு.

கொழும்பு, 15.9.1966.

10-1058/1—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல.14,719

---

## நாவலப்பிட்டி நகரசபை

### நகரசபைகள் கட்டளைச் சட்டம்

### 1966 ஆம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரி

(255 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ) என்னும் பிரிவின் கீழும், அப்பிரிவினுல் உள்ளூராட்சி யமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அவரால் கொடுபட்ட அங்கீகாரத்துடனும், நாவலப்பிட்டிப் பட்டினத்தினுள்ளேயுள்ள அசைவற்ற ஆதனமெல்லாவற்றினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு இரண்டு வீதமானதும், முறையே யூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய தேதிகளில் சமமான மூன்று தவணைப் பணங்களாகக் கொடுபடற்பாலதுமான விசேட தண்ணீர் வரியொன்றை நாவலப்பிட்டி நகரசபை துணைவிதிகளின்படி விதிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் விலக்குகளுக்குமமைய 1966 ஆம் ஆண்டுக்கு விதித்திருக்கின்றதென இதனுல் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சியமைச்சு.

கொழும்பு, 15.9.1966.

10-1058/2—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல். 14,719

---

# பதவிகள்—வெற்றிடம்

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. **படிகள்.**—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டுவாடகைப்படி, தற்காலிக வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விதிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்படற்பாலன.

2. **சேவை நிபந்தனைகள்.**—உள்ளூராட்சிச்சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினுல் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. **வேலைக்கமர்த்தப்படுவதற்கான நியதிகள்.**—1952 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின்கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், இளைப்பாற்றிச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றிச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களில், அவற்றின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறுபோதும் கொடுக்கப்படும் இளைப்பாற்றிச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர் முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றிச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றிச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர் "களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் " அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியெய்துவதைப் பொறுத்ததாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும் பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும். (13,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

**(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்**

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ந் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

**(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்**

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதலில் இடைநிறுத்தப்படும். இரண்டாவதாக, நிறுத்தப்படும், அதன்பின் பின் போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில, விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சிச் சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

" (மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்) ".

குறிப்பு.—இதில் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் " என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதையும் திருப்திகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் " இலங்கையர் " என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

6. **போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை:**

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக்கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையில் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச் சலுகை.**—உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள், எவ்வயதினராயிருந்தாலும், விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அருகதையுடையோராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதியின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப்படுதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிக்குமுன்னர் காணப்படின் விண்ணப்பதாருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

**(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

(vii) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்படவேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக் கூடாது."

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

**உள்ளூராட்சிச் சேவை**

**முக்கியமாக கவனிக்க.**—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை தலைவரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(iii) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்:—(1) பிறப்புச் சான்றிதழ், (2) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழிநுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பக்காரர் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

.......................(........) பதவிக்கான விண்ணப்பம்.

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ————.

(ஆ) ........................ பதவிக்கான விண்ணப்பம்
முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.

2. தேசீய இனம் : ————.
(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார், எண்ணையும் திகதியையும் கூறுக).

3. தபால் விலாசம் : ————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது : ————.
..........வருடங்கள் ........மாதங்கள்......நாட்கள்
(ஆ) பிறந்த திகதி : ————.

5. பிறந்த இடம் :
(அ) விண்ணப்பக்காரர் : ————.
(ஆ) அவரது பிதா : ————.
(இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.
(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.

(விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளா, தாரமிழந்தவரா அல்லது கைம்பெண்ணா ? : ————

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | |
|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1.................... | .......... | .......... |
| 2.................... | .......... | .......... |
| 3.................... | .......... | .......... |
| 4.................... | .......... | .......... |
| 5.................... | .......... | .......... |

| உயர் தொழிற்/தொழில்நுட்பக் கல்வி | | |
|---|---|---|
| தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. .................... | .......... | .......... |
| 2. .................... | .......... | .......... |
| 3. .................... | .......... | .......... |
| 4. .................... | .......... | .......... |
| 5. .................... | .......... | .......... |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் : ————.
(அ) சிங்களம் : ————.
(ஆ) ஆங்கிலம் : ————.
(இ) தமிழ் : ————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில்—அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ————.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் : ————.

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.

(ii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக சம்பள அளவுத் திட்டமும் : ————.

(iii) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?

(அ) சிங்களம் : ————.

(ஆ) தமிழ் : ————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில் அவற்றின் முழு விவரங்களையும் திகதிகளுடன் தருக) : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு எதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை : ————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர், தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி, வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

தலைவர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

---

## சுகாதார வைத்திய உத்தியோகத்தர் பதவிகள்

மேற்படி பதவிகளுக்குரிய விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் வரவேற்கப்படுகின்றன.

2. நியமனத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் கொழும்பு மாநகர சபைக்கு நியமிக்கப்படுவார்கள். அவர்கள் கொழும்பு மாநகரத்து எல்லைக்குள் வசிக்க வேண்டியுள்ளது. தனிப்பட்ட முறையில் தொழில் நடாத்தவும் அவர்கள் தவிர்க்கப்படுவார்கள்.

3. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதன அடிப்படை வருமாறு : வருடாந்தம் ரூபா 8,880—9 × 480—2 × 600—ரூபா 14,400, வருடாந்தம் ரூபா 11,280 ல் 2 வருட நிறுத்துகை, வருடாந்தம் ரூபா 11,760 பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையுண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தகைமைகள், அனுபவம் ஆகியவற்றின் பிரகாரம், அவர்களுடைய அடிப்படையில் ஒருபடியில் அமர்த்தப்படக்கூடும்.

4. மேற்கண்ட 3 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட வேதனத்துடன் அரசாங்க வைத்திய உத்தியோகத்தர்களுக்குக் கொடுபடத்தக்க இளைப்பாற்றுச் சம்பளமில்லாத படிகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தகைமைகளுக்கிணங்க, கொடுபடத்தக்கது.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இடமாற்றப்படத்தக்கவராவார்கள்.

6. **வேண்டிய தகைமைகள்.**—(இலங்கை) எம். பி. பி. எஸ். அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்தர தகைமைகளை உடமையாகக் கொண்டிருப்பதுடன் பின்வரும் தகைமைகளில் ஏதாவதொன்றும் விண்ணப்பதாரர்களிடம் இருக்கவேண்டும்.

(1) நாட்டுவைத்தியத்தில் எம். டி. (இலண்டன்).

(2) பிரிட்டிஷ் அல்லது ரொரன்டோ அல்லது அவுஸ்திரேலியா பல்கலைக்கழகத்தில் டி. பி. எச்.

(3) இலங்கையால் நன்கு மதிக்கப்படும் அ.ஐ. நாடுகளில் அல்லது கனடாவின் பல்கலைக்கழக அல்லது வைத்தியக் கல்லூரியின் எம். பி. எச்.

(4) பொது சுகாதாரத்தின் எம். ஆர். ஸி. பி. (இலண்டன்) அல்லது (எடின்பரோ).

7. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

8. நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளுடன் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 15.11.66 க்கு முன்னர் எனக்குக்கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் உள்ள 9வது பகுதிக்குப் பதிலாகப் பின்வருவது சேர்க்கப்பட வேண்டும் :—

"9. பெறப்பட்ட வைத்திய, உயர்தொழிலுக்குரிய தகைமைகள், திகதிகளுடனும், ஸ்தானங்களின் பெயர்களுடனும் குறிப்பிடப்பட வேண்டும்."

9. உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையோ விலாசமிடவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

10. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித்தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக்காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

11. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ.ஆ.சே.அ.ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
த.பெ. 530, கொழும்பு 1.
1966 ம் ஆண்டு ஒற்றோபர் மீ உ

10.1075—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,719

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### பிரதி நகர நுணுக்க உயிரியல் அறிஞர் பதவி

ஆண், பெண் பரீட்சார்த்திகளிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி கொழும்பு மாநகரசபையின் சுகாதாரத் திணைக்களத்துக்கு நியமனம் பெற அனுப்பப்படுவார். கொழும்பு மாநகர எல்லைக்குள் அவர் வசிக்கவேண்டும்.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு.—வருடாந்தம் ரூபா 6,900—4 × 360; 10 × 480—ரூபா 13,200. வருடாந்தம் ரூபா 11,280 ல், 2 வருடநிறுத்துகை கீழ்க்கண்ட பின் பட்டதாரித்தகைமைகள் ஏதாவதொன்று இல்லாத உத்தியோகத்தர், மேற்படி, வேதன அடிப்படையில், வருடாந்தம் ரூபா 11,280 வேதனப்படிக்கப்பால் செல்லார்.

(1) டி. பி. (இலண்டன்) அல்லது விசேட படிப்பு (மன்செஸ்டர்) ;

(2) எம். ஆர். ஸி. பி. (எடின்பரோ)—நுண்கிருமியியலில், அல்லது நுண்கிருமியியலில் எம்.டி..

(3) டி.பி (ரொரண்டோ).

3. நியமிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு, மேற்கண்ட 2 வது பந்தியில் சொல்லப்பட்ட வேதனத்துடன், பின்வரும் இளைப்பாற்றுச் சம்பளமல்லாத படிகளும் கொடுபடத்தக்கவை :—

முதல் ஆறு வருடச்சேவைக்கும் வருடாந்தம் ரூபா 1,200 அதன் பின் வருடாந்தம் ரூபா 1,800—இது வருடாந்தம் ரூபா 11,760 வேதன அடிப்படைபெறும் வரைக்கும் கொடுக்கப்படுவதுடன் அந்த வேதன அடிப்படை பெற்ற பின் 4 வருடங்களுக்கும் கொடுபடத்தக்கது. அடுத்த 4 வருடங்களுக்கும் வருடாந்தம் ரூபா 2,400. அதற்கடுத்த 4 வருடங்களுக்கும் வருடாந்தம் ரூபா 3,000. அதன்பின் வருடாந்தம் ரூபா 3,600.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி, பரிசோதனைக்கூட அனுபவம், பின் பட்டதாரியனுபவம் ஆகியவற்றிற்கிணங்க, உரிய ஒரு வேதன அடிப்படையிலும் அமர்த்தப்படக்கூடும்.

5. **வேண்டிய தகைமைகள்.**—இலங்கை எம். பி. பி. எஸ். அல்லது இலங்கை வைத்தியச் சபையினால் பதிவுசெய்யப்படக்கூடிய வேறு சமமான வைத்தியத் தகைமைகள் பெற்றிருக்கவேண்டும்.

6. இப்பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறவும் தக்கது. அரசாங்கத்தின் கீழ் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவியை

வகிக்காத அல்லது அரசாங்க சேவையில்லாத பெண் பரீட்சார்த்தி, தேர்ந்தெடுக்கப்பட்டால், சேமலாப நிதி அடிப்படையில் அவர் நியமிக்கப்படுவார். ஆயினும் நியமனத்திகதியிலிருந்து 10 வருடங்களுக்குள், 1952 ம் ஆண்டின் உ.ஆ.சே. இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்துக்குள் வரும் தற்விருப்புரிமையை அவர் பிரயோகிக்கலாம், தற்விருப்புரிமை ஒருமுறை பிரயோகிக்கப்பட்டதும் பின்மாற்றுதற்காகாது.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி தனிப்பட்ட முறையில் தொழில் நடாத்தத்தவிர்க்கப்படுவார்.

8. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிப் பதவிகளுக்கு நியமனங்கள் பெறுவதற்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

9. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்திற் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, 15.11.1966 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அவை அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்திலுள்ள 9 வது அம்சத்துக்குப் பதிலாகப் பின்வருபவை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

"9 (அ) வைத்திய, உயர்தொழிலுக்குரிய தகைமைகள், திகதிகளுடனும், நிலையங்களினது பெயர்களுடனும் ;

(ஆ) பின் பட்டதாரிப் பயிற்சி வகுப்புகள் எதிலும் சித்தியடைந்திருந்தால் அவை பற்றிய விபரங்கள்.

10. உள்ளூராட்சி சேவை அதிகாரசபைத் தலைவருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையோ விலாசமிடவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

11. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப்பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப்பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித்தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித்தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர் உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக்காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

12. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்
உ.ஆ.சே.அ.ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த.பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆல ஒற்றோபர் மீ 17 ந் வ.

10–1055—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,719

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தரம் 2, மராமத்து ஓவர்சியர்கள் பதவிகள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், உள்ளூராட்சிச் சேவையில், தரம் 2, மராமத்து ஓவர்சியர்களாக நியமிக்கப்படுவார்கள். தமது வழமையான கடமைகளுடன் சுகாதார அல்லது/உம் இறைவரி வேலைகளையும் செய்யும்படி அவர்கள் அழைக்கப்படலாம். தீவில் எந்தப்பாகத்திலும் சேவை செய்ய அவர்கள் தயாராக இருக்கவேண்டும்.

3. ஒவ்வொரு பதவியும் வேதனமாக வருடாந்தம் ரூபா 750 பெறத்தக்கது. வருடாந்தம் ரூபா 42 ஆகப் 14 வருடாந்த வேதனப் பெருக்குகளுடன், வருடாந்தம் ரூபா 750 லிருந்து வருடாந்தம் ரூபா 1,338 ஆக வேதனம் உயரும். அரசாங்க வரிகள், நிபந்தனைகளுக்கிணங்க வீட்டுவாடகைப்படியும், அரசாங்கவரிகளின்படி, தற்காலிக வாழ்க்கைப்படியும், விசேட வாழ்க்கைப்படியும் கொடுபடத்தக்கன. பிரயாணப்படியும் கொடுக்கப்படும். பதவிகள் நிரந்தரமானவையும், இளைப்பாற்றுச்சம்பளம் பெறத்தக்கதுமானவை. நியமிக்கப்பட்ட பரீட்சார்த்திகள், உள்ளூர் ஆட்சிச் சேவைக்கைம்பெண்களினதும், அநாதைப் பிள்ளைகளினதும் உபகாரச்சம்பள நிதிக்குக் கட்டுப்பணதாரராய் இருப்பதற்கு உரிமையுடையவர்கள்.

4. பரீட்சார்த்திகள் 3 வருடங்களுக்குத் தகுதிகாண் காலநிலையில் நியமிக்கப்படுவார்கள். உள்ளூராட்சிச் சேவைக்கட்டளைச் சட்டத்துக்கும், அதன் கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும் அவர்கள் உட்பட்டவராவர்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், அரசாங்க மொழிக்கொள்கையை, குறிப்பாக உத்தியோககரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை, அமுல் நடாத்துவது சம்பந்தமாக /இதுவரை இயற்றப்பட்ட அல்லது இனிமேல் இயற்றப்படக்கூடிய விதிகள் எதனிற்கும் இணங்கவேண்டும். இவ்வுத்தியோகத்தர்கள், தகுதிகாண்காலநிலைக்குள் சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டும். தகுதிகாண் காலநிலையின் பின், பதவியில் அவர்கள் உறுதிப்படுத்தப்படுவது, சிங்களத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலும், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சி வகுப்புகளில் பயின்று, பரீட்சை ஒன்றில் சித்தியடைவதிலுமேயே தங்கியிருக்கிறது. தகுதிகாண் காலநிலையில் சிங்களத்தில் விதந்துரைக்கப்பட்ட தேர்ச்சியை அடையாதவர்கள் தகுதிகாண் காலநிலைக்காலப் பகுதிக்குள் வேலையினின்றும் நிறுத்தப்படலாம், ஆனால் சிங்களமொழியில் தேர்ச்சியடைய உண்மையாகவே முயற்சி எடுக்கப்பட்டதென்று நியாயமாக உ.ஆ.சே.அ.ச. திருப்தியடையும் நிலையில் வேலையினின்றும் நிறுத்துதல் பின்போடப்படலாம். உரியகாலத்தைக் கடந்த நியாயமான கால எல்லைக்குள் சித்தியடைந்தால், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபையின் தன்விருப்பமுடிபுரையின் பிரகாரம் சிரேட்டத் தன்மையிழப்பு விட்டுக்கொடுக்கப்படலாம். சிங்களமொழி மூலம் தேர்வுக்குத் தகைமை பெறும் உத்தியோகத்தர்கள் சிங்களத் தேர்ச்சிச் சோதனையினின்றும் தவிர்க்கப்படுவர்.

6. **தகுதி.**—(1) பரீட்சார்த்திகள் நற்பண்புடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் இலங்கையராய் இருத்தல் வேண்டும்.

(3) பின்வருபவற்றுள் குறைந்தது ஒரு பரீட்சையிலாகுதல், தூயகணிதம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றவர்களாகப் பரீட்சார்த்திகள் இருக்கவேண்டும்.

(அ) சி. பா. த. ப. (சிங்களம்) அல்லது (தமிழ்) ;

(ஆ) சிங்களம் அல்லது தமிழ் ஒரு பாடமாகக் கொண்ட சி. பா. த. ப. (ஆங்கிலம்) ;

(இ) இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த பொ. க. த. ப. (சாதாரணதரம்). (இருதடவைகளிலும் திறமைச்சித்திகளும், வேண்டிய மற்றைய பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும்).

**பி.கு :** விண்ணப்பத்தில் 8 வது கூடில் திறமைச் சித்தி பெற்ற பாடங்கள் குறிப்பிடப்படவேண்டும்.

(ஈ) 15.11.1966 ல் 30 வயதுக்கு மேற்பட்டவர்களாக பரீட்சார்த்திகள் இருக்கக்கூடாது. உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபையினால் வேண்டப்படும்பொழுது, தமது வயதைக்குறிக்கும் பிறப்புச் சான்றிதழ் அல்லது விசேட சான்றிதழ்களை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கவேண்டும். சத்தியவோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பங்களுடன் கல்வி, குணநலச்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்.

(உ) பின்வருபவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் :—

(அ) மேற்சொன்ன ஏதாவது பரீட்சை ஒன்றில் சித்தியடைந்து, சிறிய நிர்மாண வேலைகள், அளவு எடுத்தல், தெருக்கள் தாரிடுதல், செப்பனிடுதல் போன்றவற்றில் குறைந்தது 2 வருட அனுபவம் இருக்கவேண்டும் (அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் அல்லது அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிலையத்திடமிருந்து பெற்றசான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்) ;

(ஆ) இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியின், பொறியியல் பிரவேசப்பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்கள்.

'ஆகக்குறைந்த தகைமையும் இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

7. 1.4.1965 ல் பதவிகள் அழிக்கப்பட்டதனால் இளைப்பாற்றுவிக்கப்பட்ட ட்ரொலி பஸ் கடத்திகளும் சாரதிகளும் 15.11.1966 ல் 50 வயதுக்கு மேற்படாதும் உரியகல்வித்தகைமைகள் இருக்கும் பட்சத்திலும் விண்ணப்பிக்கலாம்.

8. (அ) வயது எவ்வாறிருப்பினும், மற்றைய தகைமைகள் இருக்கும் பட்சத்தில், உள்ளூராட்சி மன்றம் ஒன்றில் நிரந்தர பதவிகள் வகிப்பவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இத்தகைய பரீட்சார்த்திகளிடமிருந்து வரும் விண்ணப்பங்கள், தாம் சேவைசெய்யும், உள்ளூராட்சி

மன்றத்தின், விசேட ஆணையாளர், ஆணையாளர், தலைவர் மூலமாக இங்கு அனுப்பப்படவேண்டும் ;

(ஆ) இலங்கை முன்னாள் படைவீரரைப் பொறுத்தமட்டில், அல்லது உள்ளூராட்சி மன்றத்தில் தொடர்ச்சியான தற்காலிக சேவை செய்தவர்களைப் பொறுத்தமட்டில், திரட்டியசேவை உள்ளூராட்சி மன்றத்திலுள்ள தற்காலிகசேவை, தகுதிக்கென, அவர்கள் வயதிலிருந்து கழிக்கப்படும்.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியில், பயிற்சி வகுப்புகளில் பயின்று பரீட்சையில் சித்தியடையவேண்டும். பயிற்சி வகுப்புகள் 8 வாரங்கள் நடைபெறும். பயிற்சி வகுப்புகள் தொடங்குமுன் நியமனங்கள் பெறுத பரீட்சார்த்திகளுக்குப் பயிற்சிக்காலத்தில் வேதனம் அல்லது படிகள் கொடுக்கப்படுவதற்கில்லை. கொழும்பில் தங்கும் எல்லாச் செலவுகளையும் அவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். பயிற்சி வகுப்புகளுக்கு எல்லாப் பரீட்சார்த்திகளுமே ரூபா 50 (ஐம்பது ரூபாய்) மாத்திரம் கட்டணஞ் செலுத்த வேண்டும்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட பின், குறைந்தது 3 வருடங்களுக்காகுதல், உள்ளூராட்சிச் சேவையில் சேவை செய்வதாக, ரூபா 500 க்கான இரு உத்தரவாதிகளுடன் ஒரு முறியைச் செய்து கொள்ளவேண்டும்.

11. ஒரு பரீட்சார்த்தியைச் சிபாரிக்க விரும்பும் எவரும், சான்றிதழ் மூலம் சிபாரிக்கவேண்டும். எந்தவிதமான முறையிலும் செல்வாக்கைப் பிரயோகிக்க அல்லது ஆதரவை நாடமுயற்சித்தால், அப்பரீட்சார்த்தி தகைமை நீக்கம் பெறுவார்.

12. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும், உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

13. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்திற் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, 15.11.1966 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

14. எல்லா விண்ணப்பங்களும் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். தலைவர், உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபை, த.பெ. 530, கொழும்பு 1 என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமே நேரடியாக அனுப்பக்கூடாது.

15. தகுதியுடைய பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவருக்காக.
உ.ஆ.சே.அ.ச

த.பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 20 ந் உ.

10-1029—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,719

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### பிரதம மிருக மருத்துவச் சத்திர வைத்தியர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதன அடிப்படை.**—வருடாந்தம் ரூபா 8,880—9 × 480—ரூபா 13,200. வருடாந்தம் ரூபா 11,280 ல் 2 வருட நிறுத்துகை. வருடாந்தம் ரூபா 11,760 பெறுமுன் வினைத்திறமை காண்தடை.

3. **வேண்டிய தகைமைகள்.**—(அ) 15.11.66 ல் 45 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்திகள் பின்வருபவர்களுள் ஒருவராய் இருத்தல் வேண்டும்.

(1) பின் பட்டதாரிப்பயிற்சி வகுப்புகளைப் பூர்த்திசெய்த, இலங்கைப் பல்கலைக்கழக, மிருகவைத்திய அறிவியற் பட்டதாரிகள் ; அல்லது

(2) மிருக மருத்துவச் சத்திரவைத்தியர்களின் வேத்தியற் கல்லூரி அங்கத்தவர்கள் (இங்கிலாந்து) அல்லது

(3) சமமான தகைமையுடையவர்கள்.
குறைந்தது 10 வருடங்கள் அனுபவம் பெற்றவர்களாயும் பரீட்சார்த்திகள் இருக்கவேண்டும்.

4. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியிலுள்ள தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும், உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்படவேண்டும். 15.11.66 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

6. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை அணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை அணையாளர், உள்ளூராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்.
உ.ஆ.சே.அ.ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த.பெ. 530, கொழும்பு 1.
1966 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 16 ந் உ.

10-1057—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,719

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### கனிஷ்ட நூனிலையப் பொறுப்பாளர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன. 15.11.1966 ல் நான்கு வருடங்களுக்குக் குறைவில்லாத திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்தவர்களும், தமது பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டவர்களுமான, கொழும்பு மாநகரசபையில் நூனிலைய உதவியாளர்களாக இருப்பவர்களிடமிருந்தும், ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள தரம் 1, நூனிலையப் பொறுப்பாளர்களிடமிருந்தும், விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வருடாந்த வேதனம் வருமாறு :—1,380—20 × 120—ரூ. 3,780. வருடாந்தம் ரூ. 2,820 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. நியமனத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் இங்கிலாந்து நூனிலையச் சங்கத்தின், உயர் தொழிலுக்குரிய முதலாவது பரீட்சையில் அல்லது இலங்கை நூனிலையச் சங்கத்தின் முதலாவது பரீட்சையில் தேறியிருந்தால், அவ்விண்ணப்பதாரர் வருடாந்தம் ரூ. 1,620 வேதனம் பெறும் அடிப்படையில் அமர்த்தப்படுவார். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரருக்கு இந்தத் தகைமையில்லாவிட்டால், அவ்விண்ணப்பதாரர் வருடாந்தம் ரூ. 1,380 ஆரம்ப வேதனம் பெறுபவராக நியமிக்கப்பட்டு, இலங்கை நூனிலையச் சங்கத்தின் முதலாவது பரீட்சையில் தேறும் பட்சத்தில், உடனடியாக வருடாந்தம் ரூ. 1,620 வேதனம் பெறும் அடிப்படையில் அமர்த்தப்படுவார்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், நியமிக்கப்பட்ட உள்ளூராட்சிமன்ற எல்லைக்குள் அவர் வசிக்கவேண்டும். காலை 7 மணிமுதல் இரவு 8.00 மணிவரை மாறிமாறி அவர் வேலை செய்யவேண்டிவரும். தேவைப்படின், போயா தினங்களிலும், பொது விடுமுறை நாட்களிலும் வேலைசெய்யவேண்டிவரும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் இடமாற்றப்படத்தக்கவராவர்.

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளுடன் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 15.11.66 க்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

7. உள்ளூராட்சி சேவை அதிகாரசபைத் தலைவருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத்தொடர்புகளையோ விலாசமிடவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

8. விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக்காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
17.10.1966.

10–1056—27.10.66. ந் திகதிய வர்த்தமானி இல. 14,719

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தரம் 2, அச்சுக் கோப்பவர் பதவி (சிங்களம்)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி, முதலில், கொழும்பு மா.ந.ச. அழுத்தகத்துக்கு நியமிக்கப்படுவார்.

2. வேதனம்.—இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு : வருடாந்தம் ரூபா 1,296—11 × 42—ரூபா 1,758.

3. வேண்டிய தகைமைகள் :

(அ) 15.11.1966 ல் 40 வயதுக்கு அதிகமாகாமல் இருக்கவேண்டும் (உ.ஆ. சேவையில் அல்லாதவர்களுக்கு) ;

(ஆ) விண்ணப்பதாரர்கள் கனிஷ்டபாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட அழுத்தக ஸ்தாபனத்தில் அச்சுக் கோப்பவராக (சிங்களம்)க் குறைந்தது 5 வருட அனுபவமும் பெற்றிருக்கவேண்டும் ; அல்லது

அங்கீகரிக்கப்பட்ட அழுத்தக ஸ்தாபனத்தில், அச்சுக்கோப்பவராக (சிங்களம்) 10 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

4. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும், உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொதுநிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 15.11.1966 க்குப் பிந்தாமல் எனக்கு கிடைக்கும்படி அனுப்பவேண்டும். குறிப்பிட்ட படிவத்திலுள்ள 13 வது பந்திக்குப்பதிலாகப் பின்வருபவை சேர்க்கப்பட வேண்டும். " 13. அச்சுக் கோப்பவராக (சிங்களம்)ப் பெற்ற அனுபவம் பற்றிய விபரங்கள். (அழுத்தகத்தின் பெயர், சேவைக்காலம், பகுதி போன்ற விபரங்களைத்தரவும். அவற்றிற்கு அத்தாட்சியாகவுள்ள சான்றிதழ்களின் பிரதிகளையும் அனுப்பவும்) ".

6. விண்ணப்பங்களும் அது சம்பந்தமான தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பப்படக்கூடாது.

7. உள்ளூராட்சிச் சேவையில் வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ.ஆ.சே.அ.ச

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த.பெ. 530, கொழும்பு 1,
1966 ம் ஆடு ஒட்டோபர் மீ 14 ந் உ.

10–1078—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,719

---

# துணை விதிகள்

## ககாவத்தை பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) 152 ஆகிய பிரிவுகளின்கீழ் ககாவத்தை பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரக் காரியதரிசி, உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ந் ஆடு செப்டம்பர் மீ 20 ந் உ.

### துணைவிதி

(256ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின்கீழ் விதிக்கப்பட்டு, 1965ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ந் தேதியைக் கொண்டதும் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ந் தேதிய 14,576ம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டதுமான அறிவித்தலிற் குறிப்பிடப்பட்டுள்ள 1966 ம் ஆண்டுக்குரிய விசேட மலசல கூடவேலை வரியிலிருந்து இதற்குள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வளவுகளுக்கு விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

### அட்டவணை

பின்வரும் வரிமதிப்பு இலக்கங்களைக் கொண்ட வளவுகள் :—

#### வட்டாரம் 1

1/1, 1/2, 1/3, 1/4, 1/5, 1/6, 1/7, 1/8, 1/9, 1/10, 1/11, 1/12, 1/13, 1/14, 1/15, 1/16, 1/17, 1/18, 1/19, 1/20, 1/21, 1/22, 1/23, 1/24, 1/25, 1/26, 1/27, 1/28, 1/29, 1/30, 1/31, 1/32, 1/33, 1/34, 1/35 1/36, 1/37, 1/38, 1/39, 1/40, 1/41, 142, 1/43, 1/44, 1/45, 1/46, 1/47, 1/48, 1/49, 1/50, 1/51, 1/52, 1/53, 1/54, 1/55, 1/56 1/57, 1/58, 1/59, 1/60, 1/61, 1/62, 1/63

#### வட்டாரம் இல. 3

3ஆ/1, 3ஆ/2, 3ஆ/3, 3ஆ/4, 3ஆ/5, 3ஆ/6, 3ஆ/7, 3ஆ/8, 3/9, 3/10, 3ஆ/11, 3ஆ/12, 3ஆ/13, 3ஆ/14, 3ஆ/15, 3ஆ/16, 3ஆ/17

#### வட்டாரம் இல. 4

4/1, 4/2, 4/3, 4/4, 4/5, 4/6, 4/7, 4/8, 4/9, 4/10, 4/11, 4/12, 4/13, 4/14, 4/15, 4/16, 4/17

#### வட்டாரம் இல. 5

5/1, 5/2, 5/3, 5/4, 5/5, 5/6, 5/7, 5/8, 5/9, 5/10, 5/11, 5/12, 5/13, 5/14, 5/15, 5/16, 5/17, 5/18, 5/19, 5/20, 5/21, 5/22, 5/23, 5/24, 5/25, 5/26, 5/27, 5/28, 5/29, 5/30, 5/31, 5/32, 5/33, 5/34, 5/35, 5/36, 5/37, 5/38, 5/39, 5/40, 5/41, 5/42, 5/43, 5/44, 5/45, 5/46, 5/47, 5/48, 5/49, 5/50, 5/51, 5/52, 5/53, 5/54, 5/55

10–1054—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,719

# நானாவித அறிவித்தல்கள்

## சாவகச்சேரி நகர சபை

### சோலை வரி—1966

இத்தால் சகலரும் அறிவது, சாவகச்சேரி நகர சபை, நகர சபைச் சட்டத்தின்படி (அத்தியாயம் 255) 1966 ம் ஆண்டிற்கு, சென்ற வருடத்திற்கு விதித்ததின் பிரகாரம் பின்வரும் சோலை வரியை இந் நகர சபை எல்லைக்குள் விதிக்கின்றது.

160 (3) ம் பிரிவின் கீழ் சாவகச்சேரி நகர எல்லைக்குளுள்ள அசைவற்ற ஆதனங்களனைத்திற்கும் எழு வீத வரி, நான்கு சம தவணைகளில் முறையே பங்குனி 31, ஆனி 30, புரட்டாதி 30, மார்கழி 31 ஆகிய திகதிகளில் செலுத்தப்பட வேண்டும்.

இ. டா. சிவகுரு,
தலைவர்,
நகர சபை, சாவகச்சேரி.

நகர சபைக் காரியாலயம், சாவகச்சேரி,
1966 ம் ஆண்டு ஒட்டோபர் மீ 16 ந் உ.

10-1030—27.10.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,719

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படாது. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உசந்ததாய் இருக்கும்.

**அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்** அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

### அட்டவணை—1966

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | 2. 9.66 | வெள்ளி | 26. 8.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 9. 9.66 | வெள்ளி | 2. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 16. 9.66 | வெள்ளி | 9. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 23. 9.66 | வெள்ளி | 16. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 30. 9.66 | வெள்ளி | 23. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | 7.10.66 | வெள்ளி | 30. 9.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 14.10.66 | வெள்ளி | 7.10.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 20.10.66 | வியாழன் | 14.10.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 27.10.66 | வியாழன் | 20.10.66 | வியாழன் நண்பகல் | 12 |
| நவெம்பர் | 3.11.66 | வியாழன் | 27.10.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 10.11.66 | வியாழன் | 3.11.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 18.11.66 | வெள்ளி | 10.11.66 | வியாழன் நண்பகல் | 12 |
| | 25.11.66 | வெள்ளி | 18.11.66 | வெள்ளி நண்பகல் | 12 |
| திசெம்பர் | 2.12.66 | வெள்ளி | 24.11.66 | வியாழன் பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி | 2.12.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி | 8.12.66 | வியாழன் பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி | 16.12.66 | வெள்ளி பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி | 22.12.66 | வியாழன் பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆண்டு யூலை மீ 15 ந் வ.

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை, வாழைச்சேனை ஊஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.